**ஜூன் – 26**

**"இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து யேசுவைக் கவனித்துப் பாருங்கள்." - எபி 3 : 1.**

"கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள" ஒவ்வொரு அங்கமும் ராஜரீக ஆசாரியராக உலகத்தை நியாயந்தீர்க்க ராஜ்யத்தின் அந்தஸ்துக்கு உயர்த்தப்படும் பொழுது, அவர்கள் மிகவும் அன்புள்ளவர்களாகவும், இரக்கமுள்ளவர்களாகவும் உலகத்தாரின் பலவீனங்களைக் குறித்து, இப்பொழுது பரிதபிக்க வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடியவராகவும், உண்மையுள்ள ஒரு பிரதான ஆசாரியராகவும் இருக்கத்தக்கதாக, விழுந்துபோன மனுஷ ஜாதியின் குறைவுகளில் ஒன்றையும் உடையவராயிராதவரும், ஆனால் பரிசுத்தரும், குற்றமற்றவரும், பாவிகளுக்கு விலகினவருமாயிருந்த நமது கர்த்தரும், எஜமானுமானவர், மனுஷரிலிருந்து அவர்களுடைய வியாதிகளையும் பலவீனங்களையும் எடுத்துக்கொள்ள தேவையுள்ளவராய் இருந்தார். தனது உத்தியோகத்திற்காகவும், ஊழியத்திற்காகவும் உள்ள பிரதான ஆசாரியனின் ஆயத்தங்களுக்கு அவசியமாயிருந்த படிப்பினைகள் அவரோடு கூட பாடுபடவும், அரசாளவும் அழைக்கப்பட்ட கீழான ஆசாரியர்களுக்கு அவசியமில்லை என்று எண்ணுவது முற்றிலும் நியாயமற்றதாயிருக்கும். **- Z '96, 208 (R 2028).**

சகோதரர் பரிசுத்தமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். ஏனென்றால், கர்த்தருக்குத் தங்களைப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய அழைப்பிற்கு பங்குள்ளவர்களாய் இருக்கிறார்கள். ஏனென்றால், பிதாவினால் அழைக்கப்பட்டவர்களாயிருக்கிற அவர்கள், அழைப்பை ஏற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறார்கள். கிறிஸ்து பிதாவினால் அனுப்பப்பட்டவராகவும், ஆசாரிய ஒழுங்கின் பிரதான ஆசாரியராகவும் இருக்கிறார், என்கிற இவைகளைக் குறித்து ஆழ்ந்து யோசிப்பது, அவர்களுடைய லாபகரமான செயல்களில் ஒன்றாகும். அவருடைய அடிச்சுவடுகளில் நடக்க இது அவர்களைச் சாத்தியமாக்குகிறது. **-P '30, 78.**

**ஒத்து வாக்கியங்கள்** :-ஏசா 53; யோவா 19:5; பிலி 2:5-11; 3:14; 2தீமோ 1:9; 2பேது 1:10; எபி 2:9,17,18; 4:14; 5:5; 6:20; 8:(2)1; 9:11; 10:21; 12:2,3; 1பேது 2:21.

**கோபுர வாசிப்பு : Z '11, 122 (R 4802).**

**வினாக்கள்** : யேசுவைப் பற்றி ஆழ்ந்து தியானித்தது இந்த வாரத்தில் எனக்குச் செய்தது என்ன? இதில் நான் எவ்வாறு விருத்தியடையலாம்?